Tamil
I Was Not Disobedient To The Heavenly Vision
49-0718

# நான் அந்த பரம தரிசனத்திற்கு கீழ்படியாதவனாயிருக்கவில்லை

Zion, Illinois, USA
49-0718

www.messagehub.info

வில்லியம் மரியன் பிரன்ஹாம்
"... சத்ததின் நாட்களிலே..." வெளி.10:7

# முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மக்களை ஆயத்தபடுத்த ஒரு ஊழியம் எழும்பவேண்டியது அவசியம் என்று வேதத்தில் உரைக்கப்பட்டிருக்கிறது. மல்கியா 4:5,6, லூக்கா 17:30 மற்றும் வெளிப்பாடு 10:7 அது போன்று வேதத்தில் உறைக்கபட்டிருக்கிற அனேக தீர்க்கதரிசன வசனங்களுக்கு வில்லியம் பிரன்ஹாம் அவர்களின் மகத்தான ஊழியமே பரிசுத்த ஆவியின் பிரதியுத்திரமாக இருக்கிறது. இந்த உலகளாவிய ஊழியம் தேவனுடைய ஆவியினாலே கடைசிகாலத்தில் தொர்ந்து நடைபெறும் அவருடைய கிறியைகள்.

நீங்கள் இந்த செய்தியை ஜெபத்துடன் வாசிக்கும்போது இந்த அச்சடிக்கபட்ட வார்த்தையானது உங்களுடைய இருதயத்தில் எழுதபட்டதாய் மாறவேண்டும் என்பதே எங்களுடைய ஜெபம்.

இம்மொழியாக்கம் முழு கவனத்தோடு கச்சிதமாய், எதையும் கூட்டாமலும் குறைக்காமலும், முடிந்த அளவிற்க்கு முயற்சியெடுக்கபட்டிருக்கிறது. இருப்பினும் வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பிரசிங்கித்த ஆங்கில ஒளிநாடாவே அதிகாரப்பூர்வமானது.

வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பிரசங்கித்த 1,100 ஒளிநாடாக்களும் புத்தகங்களும் அனேக மொழிகளில் பதிவிறக்கம் செய்யவும் அச்சடிக்கவும் இலவசமாய் உள்ளது.

இந்த புத்தங்கள் எந்த மாறுதலும் இல்லாமல் இருக்கிறபடியே முழுமையாய் மறு அச்சடித்து இலவசமாய் வினையோகிக்க அனுமதி உண்டு

# நான் அந்த பரம தரிசனத்திற்கு கீழ்படியாதவனாயிருக்கவில்லை

1 நன்றி சகோதரரே......? அந்த விதமான வழியில் தான், நான் உங்களையும் நேசிக்கிறேன். (எத்தனை பேர் சகோதரன் பிரன்ஹாமை நேசிக்கிறீர்கள்) உங்கள் கரங்களைப் பார்க்கட்டும். மிக்க நன்றி. அது நம்மிடையே இருக்கும் ஒரு பரஸ்பர அன்பு என்று நிச்சயத்திருக்கிறேன்.

நாம் எல்லாரும் நேசிக்கும் கர்த்தராகிய இயேசுவை நோக்கி பேசும் போது, தலைகளை தாழ்த்துவோமாக.

எங்கள் பரலோகத்தின் பிதாவே! இந்த மாலை வேலையில், பரிசுத்த ஆவியின் மூலமாக, உமது குமாரன் இயேசுவின் அன்பு எங்கள் இருதயத்தில் ஊற்றப்பட்டு பரவி இருப்பதற்க்காக, உமக்கு மிகுந்த நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம். உம்முடைய பிரசன்னம் ஏற்கனவே இங்கு எங்களை சந்தித்திருப்பதால், நாங்கள் மிகுந்த சந்தோஷமடைகிறோம். மேலும் இன்றிரவு அவரை எதிர் நோக்கி இருக்கிறோம். அவர் எங்களை இந்த இரவில் முழுமையான சந்தோஷத்திற்குள் வைப்பதால், எல்லா தவறான காரியங்கள் எங்கள் கண்களில் இருந்து மறைக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கட்டிடதிற்குள், பாவிகள் இருப்பார்களானால், அவர்கள் முதலாவது தங்கள் இருதயங்களை, உமது சேவைக்கு கொடுக்கும் வரைக்கும், இந்த கட்டிடத்தின் நுழைவாயிலை கடந்து செல்லாமல் இருக்க, அவர்களுக்கு அருள் செய்வீராக.

கர்த்தாவே! சரீர பிரகாரமாக கஷ்டப்படுபவர்களை, ஆசீர்வதியும். ஆண்டவரே, எங்கள் அன்பார்ந்த பூமிக்குரிய மருத்துவர்கள் கடினமாக, இரவும், பகலும், அவர்கள் உயிரை காப்பாற்ற முயற்சித்தும், எதிராளியானவன் அவர்கள் உயிரை எடுப்பதற்கு நிச்சயத்து விட்டான். அப்படிப்பட்டவர்கள், இந்த இரவு இங்கே இருக்கிறார்கள். தேவனே நீர் தான் அவர்களின் முடிவுக்கு கடைசியாக இருக்கக்கூடிய தஞ்சம், என்று அறிந்து, உம்மிடத்தில் வந்திருக்கின்றனர். ஓ தகப்பனே! அவர்கள் தெய்வீக விசுவாசத்தில் இருப்பதால் ஒருவரையும் ஏமாற்றதுக்குள்ளாக்க மாட்டீர் என்பதை நிச்சயத்திருக்கிறேன். இன்றிரவு ஒவ்வொருவரும் சுகம் அடைய ஜெபிக்கிறோம். பிதாவே இது அநேக நாட்களுக்கு முன் விதைக்கப்பட்ட வித்துக்களாய் இருப்பதால், ஒரு பெரிய எழுப்புதல் உண்டாக்கக் கூடியதாக இருக்கட்டும்.

2 மேலும், பிதாவே, உமது மக்கள் அனைவரும் பரலோகத்தில் ஒன்று கூடுவதைப் போன்ற ஒரு பெரிய ஐக்கிய எழுப்புதல் ஏற்பட வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். மேலும் பல வருடங்களுக்கு முன்பாக உம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் கூறிய காரியங்கள் செயல்படட்டும். பிதாவே, உம்முடைய ஊழியக்காரன் சத்தத்திற்கு செவி கொடுக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இங்குள்ள அனைவரையும், அனைத்து கிறிஸ்தவர்களையும் ஆசீர்வதிப்பீராக.

மேலும் பிதாவே! இங்குள்ள டீக்கன்மார்களுக்காகவும், சக

ஊழியக்காரர் களுக்காகவும், கூடி உள்ள அனைவருக்காகவும், நன்றி கூறுகிறோம். ஆதலால் இங்கிருந்து கடந்து செல்லும் போது, "தேவகுமாரனின் பிரசன்னத்தால், நம்முடைய இருதயம் நமக்குள் கொழுந்து விட்டு எரியவில்லையா? என்று நாங்கள் கூறட்டும்."

சில நேரத்துக்கு முன்னால் உம்முடைய மகா பெரிய வல்லமையால், அந்த எத்தியோபிய சிறுமி, அளவு கடந்த வேதனையிலிருந்து குணமடைந்ததற்காக, உமக்கு நன்றி சொல்லுகிறோம். அவளை கடந்து செல்லும் போது "சற்று, உம்முடைய கரங்களை இங்கே வையும், சகோதரன் பிரன்ஹாமே! என்று சொல்லிக் கொண்டதற்கு, உடனே கர்த்தாவே! நீர் அவளுக்கு சுகம் தந்தீர், இப்போது அவள் களிக்கூறுகிறாள். ஒரு காலத்தில் கஷ்டத்தை சகித்தாள், இப்போதோ விடுதலையாய் இருக்கிறாள். எப்படி உமக்கு நன்றி செலுத்துவோம்."

மேலும், இப்போது கர்த்தாவே, இந்த இரவில், இந்த கட்டிடத்தில் உள்ள அநேகருக்கு அதைப் போலவே, அதே விதமான அனுபவம் இருக்க ஜெபிக்கிறேன். கர்த்தருடைய மகிமைக்காக அவருடைய பரிசுத்த குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்!

3 (ஒலி நாடாவில் காலி இடம்).

சிரியா தேசமெங்கும் அவர் புகழ் பரவிற்று. பலதரப்பட்ட வியாதியினால் அலசடிப்பட்ட வியாதியஸ்தரை அவரிடம் கொண்டு வந்தனர்.

மேலும் பிசாசு பிடிதவர்களையும், புத்தி சுவாதீனம் இல்லாதவர்களையும், திமிர்வாதக்காரர்களையும் கொண்டு வந்தனர். அவர்கள் எல்லாரையும் அவர் குணமாக்கினார்.

அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். ஆமென்! இப்போதும், இந்த சீயோன் நகரத்தில், இரண்டாவது நாளாக தங்கி இருப்பது, உங்களை பற்றி அதிகமாக அறியவும், நினைக்கவும், செய்கிறது. மேலும் நீங்கள் ஊழியத்திற்க்கு செய்த எல்லாவற்றிக்காகவும் உங்களை பாராட்டி, நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவருடைய ஊழியத்திற்கு நீங்கள் உறுதுணையாக இருந்து காட்டும் கருனைக்காக ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகிறேன்.

4 இப்போதும் கர்த்தருக்கு சித்தமானால் நாளை காலை எனது வீட்டுக்கு சென்று, உடனே ஃபோர்ட் வெயின்னுக்கு சொல்லுவேன். பின்பு கீழே ஜோன்ஸ்பாரரோ, ஆர்கன்சாஸ் சென்று, அதற்குப் பிறகு சரிவிபோட், லூசியானாவுக்கு சென்று, மேலும் திரும்ப தண்ணீர் வழியாக பிளின்ட், மிச்சிகனுக்கு சென்று, பிளின்டிலிருந்து டாக்காமாவுக்கு சென்று பின்பு அங்கிருந்து பெள்ளிங்காமுக்கு செல்வேன். பின்பு பெள்ளிங்காமிலிருந்து கனடாவுக்கு சென்று, பின்பு கனடாவை கடந்து பின்லாந்து, ஸ்கேண்டிநேவியா நாடுகளுக்கு கடல் கடந்து செல்லுவேன்.

மேலும் நான் நிச்சயமாகவும், உத்தமமான இருதயத்தோடும் இதை



விசுவாசியுங்கள். ஒரு முறை கூட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் கேட்போம். மிகவும் நேர்த்தியாக இருக்கிறது மனிதனே, கன்னங்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருக்க, சர்வ வல்லமை உள்ளவரின் பிரசன்னத்தை உணர்ந்தவாறு அங்கு நின்று கொண்டிருக்கிறார்.

சர்வ வல்லமை உள்ள தேவனே, இந்த மேடையின் மேல், இந்த இரவு சுற்றிக் கொண்டு இருக்கின்ற நீர், இந்த மகனுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்று ஜெபிக்கிறோம். அவருடைய இருதயத்தின் விருப்பத்தை அருளுமாறு, அவருடைய மாறு கண்கள் இயல்பான இடத்திற்கு வர இந்த இரவு ஜெபிக்கிறோம். பிறந்ததிலிருந்து அவர் இப்படித்தான் இருக்கிறார் தகப்பனே. இப்பொழுது கூட அவருடைய கண்களை நேர் படுத்த உம்மால் முடியும். இந்த ஆசீர்வாதத்தை அருளும்படி கேட்கிறேன். மேலும் இந்த சுகவீனங்களில் இருந்தும் இந்த மனிதன் குணமாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மகனை கட்டப்பட்டு இருக்கிற சத்துருவின் வல்லமையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கடிந்து கொள்கிறேன். ஆமென். எல்லா கண்களும் மூடி இருக்க வேண்டும். இப்போ அந்த முதுகு பிரச்சனையிலிருந்து வரக்கூடிய அதிர்வுகளும், சுரப்பி வீங்கி இருப்பதும் நின்று போய்விட்டது. இப்போது கண்களுக்கு, நிச்சயமாக அது கிருமினாலோ அல்லது தொற்று நோயால் வருவது கிடையாது. ஒவ்வொரு ஒவ்வொரு கண்களும் மூடி இருப்பதாக சந்தேகிக்க வேண்டாம்.

நீ....... வரைக்கும், உன்னுடைய கண்களையும் மூடி இருப்பாயாக. சரியாக என்னையே பாரு.....?........ எவ்வளவு காலமாகவோ?.......?....... கவலை இல்லை, கண்ணாடி அல்லது இல்லை.....அது உனக்கு தேவையே படாது. உன்னுடைய கண்ணாடி? உன்னுடைய கண்கள் நேராகிவிட்டது. நீ உன்னுடைய வீட்டுக்கு கர்த்தரை துதித்துக் கொண்டும், களிக்கூர்ந்துக் கொண்டும் செல்லலாம்.

சபையாரே, உங்கள் தலைகளை உயர்த்தவும். அதோ அந்த மனிதன். நாம் எல்லாரும் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லுவோம். ஒவ்வொருவரும்..........?.......ஒவ்வொருவரும்........... கர்த்தருக்கு ஸ்தோத்திரம், ஒவ்வொருவரும்.

எல்லா இடங்களிலும், எல்லோரும் உங்கள் தலைகளை தாழ்த்தவும். உங்களுடைய தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும்.......?..... சளிக்காய்ச்சல் ஒரு வியாதி கிடையாது. அந்த காரணத்தினால் தான் நான் சொன்னேன், நம்பிக்கொண்டே இருங்கள். உங்கள் தொண்டை, மூக்கில் உள்ள தோலை காட்டிலும் பெரிது.........?........ உடல் சம்பந்தமான அதிர்வுகள் உண்டு....?..... ஆனால் ஒரு குழந்தையினுடைய கரங்களில் உள்ள அதிர்வுகளை உணர முடியும்......?......

கொண்டிருக்கிறது. இப்போது உன்னுடைய சிறு தலையை தாழ்த்தினவாறு இரு. இப்போது இந்த வழியாக பார். இங்கே வா......?...... ஓ....?.... குழந்தையிடம்..........

உங்கள் தலைகளை உயர்த்தவும்?. இந்த சிறு பெண் குணமாக்கப்பட்டாள். கண்களும் கால்களும் இரண்டுமே குணமாக்கப்பட்டது. இப்போது இந்த பக்கமா பாரு தேனே. சபையினர் அதை பார்க்கலாம். நேரா அதையே பார்.......?...... அங்கே அதை பார். இந்த பக்கமாக பார், நேரா உனக்கு முன்னாடி பார். அதை நேராக பார்....?...அங்கே பார். இந்த வழியில் மேலே பார், நேராக முன்னால்...?...

அதோ அவளுடைய சிறு பாதங்கள், அதன் மேல் கட்டி இருப்பதாக சொன்னார்களே. .. .. அவைகள்..... அவைகள், எப்படி முழு நிறைவுடன் இருக்கமுடியுமா அப்படி இருக்கின்றன. எல்லோரும் “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று சொல்வோமாக , எல்லாரும். ( நாடாவில் காலி இடம்)

33 ........?........ உங்களுடன் கேட்கின்றன், இதற்கு முன்பாக அது உங்களுடைய........உங்களுடைய உன்னுடைய கண்கள் தானே? எல்லாம் சரி. கர்த்தர் உங்களுக்கு இதையெல்லாம் செய்வார் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா? சகோதரனே? நான் உங்களுக்கு ஒரு ஒரு சிறு.............?......... மன்னிக்கவும், மன்னிக்கவும், ஒரு வேலை இது உங்களை .........?........ உங்கள் முதுகை துன்புறுத்திக் கொண்டிருக்கலாம். உங்கள் சுரப்பியும் கூட. அது உங்கள் நரம்பை எல்லாம் சிலிர்க்க வைக்கிறது (பயத்தினால் படபடத்து இருக்க வைக்கிறது) அது சரிதானே? இப்படி எவ்வளவு காலம் இருக்கிறது சகோதரனே.? நீங்கள் அப்படி தான் பிறந்திருக்கிறீர்கள்........ எல்லாம் சரி, உங்கள் தலையை தாழ்த்தவும்.....?.... நீங்கள் மாறு கண்களோடும் கூட பிறந்திருக்கிறீர்கள்.

சர்வ வல்லமை உள்ள ஆண்டவரே, ஜீவனத்தின் ஆக்கியோனே, உம்முடைய ஆசீர்வாதங்களை இந்த மனிதனுக்கு அனுப்பி, இந்த இரவு அவரை குணமாக்கும். இந்த மனிதனுக்கு கருணை காட்டுவதினால், இந்த கட்டிடத்தில் உள்ள மனிதருக்குள் விசுவாசம் அதிகரித்து, அதனால் உம்மை முழு மனதோடு நம்பும்படியாக செய்ய, நான் உம்மிடம் ஜெபிக்கிறேன் கர்த்தாவே.

சாத்தானே நீ, இந்த மனிதனை விட்டு வெளியே செல்ல தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டளை இடுகிறேன்........?

தலைகள் தாழ்த்தினவாறு இருக்கவும்; எல்லோரும் பயபக்தியுடன் ......?....... ஆமாம்....... எங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள், ஐயா ? வாஷிங்டன். உங்கள் கண்கள் மோசமாக இருக்கிறது. உங்களுக்கு தெரியுமா? ஆமாம், ஆமாம், ஐயா அவைகள்............இப்படி உருவாய் கொண்டிருக்கின்றன. இப்போ சற்று



சொல்லுகிறேன். உங்களுடைய ஜெபத்தை மிகவும் ஆவலுடன் விருப்பபடுகிறேன். உங்களுடைய ஜெபத்தில் தான் செயின்ட் லூயிஸ்சிலிருந்து திரும்ப என்னை இங்கு வரவழைத்தது. மேலும் கர்த்தர் உங்கள் ஜெபத்தை கேட்கிறார். மேலும் நான் கர்த்தருடைய சேவையில் முற்றிலும் தரித்திருந்து, என்னுடைய எல்லா முயற்சியையும் கர்த்தராகிய இயேசுவின் சேவைக்கு ஒப்படைக்க நீங்கள் ஜெபிக்க உறுதியாய் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் எனக்கு வாக்குறுதி தருவீர்களா? (சபையார் ஆமென் என்கின்றனர்).

நன்றி! நான் அதன் மேல் சார்ந்து இருப்பேன். மேலும் உங்களுக்காக ஜெபிப்பேன். மேலும் நீங்கள் எதிர்பார்க்கும் அந்த பெரிய உயிர் மீட்சி உங்கள் பட்டணத்துக்கு வரும் என்று நம்புகிறேன்.

5 சமீபமாக, இந்த மதியம், இந்த மேடையில் இருக்கும் ஒரு சகோதரர் என்னிடம் ஒரு பெண் கொடுத்த கடிதத்தை கொடுத்தார். அதில்.........ஒரு புனிதமான, வயது சென்ற, ஒரு தாயாரை போன்ற பெண்மணி, இந்த சிற்றுண்டியின் முகப்பு அறையிலிருந்து, இதை சகோதரன் பிரன்ஹாமிடம் நீங்களே, தனிப்பட்ட முறையில் கொடுத்து விடவும் என்று கூறினார். அவள் உங்களுடைய அதாவது நம்முடைய மிகவும் பிரசித்தம் பெற்ற சகோதரன் டாக்டர் அலெக்ஸாண்டர் டவ்வியுடன் பழக்கமானவர். அவர் இன்றிரவு கர்த்தருக்குள் நித்திரையில் உள்ளார். (இல்லை அவருடைய சரீரம் மட்டும் தான்). அவருடைய ஆத்மா இயேசுவோடு உள்ளது. அவள் சொன்னாள். “40 வருடங்களுக்கு முன்னால் அவர் இறக்கும் போது தீர்க்கதரிசனமாக இதை சொன்னார்”. அவர் என்ன சொன்னார் என்றால், “நான் இறந்த பிறகு 40 வருடங்களுக்கு இந்த பட்டிணம் அலசடிபடும். ஆனால் 40 வருடம் கழித்து ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகும் என்று சொன்னார்.

6 இப்போது அந்த எழுப்புதலின் ஆவி இந்த பட்டணத்தில் இருக்கிறது என்று நம்புகிறேன். மேலும் எனது அன்பு நண்பர்களே உங்களை விட்டு பிரிகிறேன். எப்போது திரும்ப உங்களுடன் இருப்பேன் என்று தெரியாது. ஒரு நாள் உங்களிடத்துக்கு வருவேன் என்று நம்புகிறேன். ஆனால் இதை கேட்பேன் என்று நம்புகிறேன். ஒரு பழமை வாய்ந்த எழுப்புதல் பட்டிணத்துக்குள் வந்து விட்டது என்று கர்த்தரை விசுவாசிக்கிறேன். அதை அப்படியே தக்க வைத்துக் கொள்வீர்களானால், அது இப்போதே சரியாக இங்கு இருக்கிறது. இந்த சபையை நிறுவியவர்களும், மேலும் உங்கள் போதகர்களும், ஒரே மனதோடும், ஒரே இருதயத்தோடும் ஒரு பழமையான எழுப்புதலை கொண்டு வரவும், அதனால் மக்கள் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வரவேண்டும் என்ற பிரார்த்திக்கிறேன். மகிமையான இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்காக மீண்டும் அவர்கள் சீயோனுக்கு வருவார்கள்.

நாம் பின்மாரி காலத்தில் இருக்கிறோம் என்று நம்புகிறேன். இப்போது நான்........நீங்கள் சென்று “இயேசு இன்னும் ஒரு குறிப்பிட்ட நேரங்களுக்கு பின் இங்கே இருப்பார் என்று சகோதரன் பிரான்ஹாம் சொன்னார் என்று யாரும் போய் வெளியே செல்ல வேண்டாம்.” என்று

கூறுகிறேன். எனக்கு தெரியாது ஆனால் வேதத்தில் கூறியிருக்கிற காரியங்களை அறிந்த மட்டில், ஏதோ ஒரு காரியம் சீக்கிரம் நடக்க போகிறது என்று நான் நம்புகிறேன். இந்த உலகம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

7 சில கணங்களுக்கு முன்னால் நான் அறிவியலைப் பற்றி சிந்தித்து கொண்டு இருந்தேன், மேலும் நான், அந்த விஞ்ஞானம் எப்படி இயற்கை மனிதனை எப்படி அழைத்துச் செல்கிறது. இயற்கையின் வீழ்ச்சியிலிருந்து அவன் எப்படி ஆராய்ச்சிக்குச் சென்றான், அவன் என்ன செய்தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். மேலும், ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவனுடைய ராஜ்யத்தில் எவ்வளவு குறைவாக முன்னேறி இருக்கிறான்.

மேலும் நான் எப்படி ஒரு இயற்கையான மனிதன் வெளியே சென்று கண்களுக்கு காணக் கூடாத ஒரு அணுவை வானத்திலிருந்து எடுத்து அதை இரண்டாக பிளந்து மனிதனின் வாழ்கையை எப்படி சீரழிக்கிறான் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். மேலும் ஒரு வேலை அந்த இயற்கையான மனிதன் தேவனை பற்றி ஒன்றும் தெரியாமல் இருக்கும் போது, தேவனை பற்றி ஒன்னும் தெரிய முடியாமல் இருந்து, மணந்திரும்பினால் அப்பொழுது அவனுடைய ஆத்மா இயற்கைக்கும் மேம்பட்டவரோடு, உயிர் பெற்று ஒன்றி விடும். இந்த இயற்கையான உறைவிடத்தில் அவன் செய்ய முடியும் என்றால், என்னை தேவனுடைய மனிதன் என்னத்தை செய்ய முடியாமல் இருக்கும். என்னுடைய, என்னுடைய நண்பர்களை, சபை வெகு தூரம் போய்விட்டது. ஓ! கர்த்தர் சபையைப் மேலே எடுத்து கொள்ள வேண்டும் என்று பிரார்த்திப்போம். அவர்கள்... இயற்கையான மனிதன், இயற்கையான வளங்களை வைத்துக் கொண்டு சிறந்த காரியங்களை, கிறிஸ்தவர்கள் என்று சொல்ல கூடிய மனதர்கள் செய்யக்கூடியதை காட்டிலும் மேன்மையாக செய்கிறார்கள். அந்த காணக்கூடாததற்குள்ளே செல்ல பார்ப்போம். ஆசீர்வாதங்கள் உங்களுடையது, அவைகள் உங்களுக்காகவே.

8 இப்போது, இந்த கூட்டங்களை யாரும் தவிர்க்கவோ அல்லது தப்பாக புரிந்து கொள்ளவோ கூடாது என்று நான் வஞ்சிக்கிறேன். நான் ஒரு வைத்தியருடைய இடத்தை எடுக்கவோ, அல்லது எடுப்பதற்கு முயற்சிக்கவும் முற்படவில்லை. இது மேயா மருத்துவமனை கிடையாது. இது ஜெபத்தின் வீடு. மருத்துவர்களை கர்த்தர் இங்கு வைத்தார். அவர்கள் ஒரு நல்ல காரியம் செய்கின்றனர். ஆனால் நண்பர்களே மருத்துவர்கள் உங்களுக்கு சுகத்தை கொடுத்ததாக உரிமை கோர முடியாது. அவர்கள் இயற்கையின் உதவியோடு அறுவை சிகிச்சையும், மருத்துவ பரிகாரங்களையும் செய்வர். அது இயற்கைக்கு உதவும். ஆனால் இயற்கை சுகமாக்கும். இயற்கை தான் ஆண்டவர்,

ஆண்டவர் தான் இயற்கை மனித சமுதாயத்திற்கு உதவ, மருத்துவத்தில் ஆராய்ச்சிகளை செய்து முன்னேற்ற அவர்கள் முயற்சிக்கின்றனர், ஆகையால் நாம் மருத்தவர்களுக்கு மரியாதை செய்வோம்.



பரலோகத்தின் பிதாவே, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின உம்முடைய நாமத்தில் இந்த குழந்தையை நான் ஆசீர்வதிக்கிறேன். நீர் அந்த சிறுமியை ஆசீர்வதியும். இன்று இரவு நாங்கள் நின்றுகொண்டு, அந்த குழந்தைக்கு உமது மகிமை அறியப்படவேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிரோம்.. ஓ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, உம்மை எப்படி நேசிக்கிறோம். மேலும் நீங்கள் சுகம் தர வேண்டும் என்று ஜெபிக்கிறோம், அந்த கண்கள் குணமாக்க வேண்டும் என்று ஜெபிக்கிறோம். நீர் இங்கு இருக்கிறீர்..........(ஒலி நாடாவில் காலி இடம்)

எல்லோரும் பயபக்தியுடன் இருங்கள். இதுதான் இந்த கூட்டத்தின் முதல் இரவு. ஒரு அவிசுவாசி இங்கே இருக்கிறார் என்பதை நான் கணித்துக் கொண்டேன். ஆனால் இந்த இரவு நம் மத்தியில் ஒருவர் இருக்கிறார். அது சரிதானே. அது என்னை பயங்கரமாக கடினப்படுத்திக் கொண்டிருக்கிறது. நான் இதை .................. ஐயா, நாங்கள் ஒன்று கூடி இருப்பதற்கு மேலும் இந்தக் கூட்டங்களுக்கு உதவி செய்ய நீங்கள் இந்த இடத்தை விட்டு சென்று விட்டால் நலமாய் இருக்கும்...... நீர் இதை தடை செய்கிறீர். இது மிகவும் அசிங்கமாகவும் கடினமாகவும் உள்ளது. ஒரு அவிசுவாச ஆவி.........நீர் ஒற்றுமைக்குள் இருக்கப்பட வேண்டும். இது மிகவும் கடினமாக உள்ளது. ....?...... (ஒரு சகோதரன் சொல்கிறார். ஒவ்வொருவரும் ஜெபத்திற்காக எழுந்து நிற்கவும். இந்த குழந்தைக்காக சுவிஷேசத்தின் மூலமாய் சுகம் பெற்று தர, இந்த சகோதரனுக்கு ஒத்துழைப்பு தருவீர்களா? அது சரி ஆமென்.

எங்கள் பரலோக பிதாவே, இந்த சிறு சகோதரிக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். மேலும் கர்த்தாவே அவளுடைய சிறு கால்களுக்கும், கண்களுக்கும் சுகத்தை அருளும்படியாக கேட்டுக் கொள்கிறோம். அவளுடைய ஒவ்வொரு துளியையும் முழுமையாக்க நீர் இங்கு இருக்கிறீர். இப்போது நீர் அதை அருள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் தேவனே.

சாத்தானே நீ அந்த சிறுமியை விட்டு வெளியே வா என்று, தேவகுமாரன் பெயரில் கட்டளை கொடுக்கிறேன்.

தேனே, நான் சொல்லும் வரைக்கும் கண்களை மூடிக்கொள். இப்போது மெதுவா கண்களை திற............

சர்வ வல்லமையுள்ள தேவனே, ஜீவனுக்கெல்லாம் அதிபதியே, நன்மையான ஈவுகளை கொடுப்பவரே. இந்த சிறுமிக்கு உமது ஆசீர்வாதத்தை அனுப்பும்.

சாத்தானே, உன்னிடம் நான் இரட்டிப்பான விசுவாசத்துடன் உன்னை சந்திக்க வருகிறேன். தேவக் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக இந்த குழந்தையை விட்டு வெளியே வா என்று கட்டளை இடுகிறேன்.

தயவுகூர்ந்து, உங்கள் தலைகளை ஒரு கணம் தாழ்த்தினவாறு, இருக்க கேட்டுக் கொள்கிறேன். ஏதோ ஒரு காரியம் நடந்து

உணர்வுகளின் மூலமாக நம்புகிறோம்.

ஒவ்வொருவரும் பயபக்தியாக இருக்கவும்.

வானத்தையும் பூமியும் உண்டாக்கின பிதாவே, உம்முடைய ஆசீர்வாதங்களை இந்த சிறுமிக்கு அனுப்பவும், சாத்தான் இந்த கொடிய தீங்கை அவளுக்கு செய்திருக்கிறான்........?........ ஆனால் நீரோ அவளுக்கு சுகம் கொடுக்க இங்கு இருக்கிறீர்.

சாத்தானே நீ இந்த பிள்ளையை விட்டு வெளியே செல்ல தேவகுமாரனாகிய இயேசுவின் மூலம் கட்டளையிடுகிறேன். அவளை விட்டு வெளியே வா சாத்தானே. சாத்தானே அந்த குழந்தையை விட்டு நீ வெளியே வா.

சாத்தானாகிய நீ அந்த குழந்தையை விட்டு வெளியே வா; இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் கட்டளை கொடுக்கிறேன், இந்த குழந்தை விட்டு விடு........?.......

இங்கே வா. ஒவ்வொரு தலையும் எல்லா இடங்களிலும் தாழ்த்தினவாறு இருக்க வேண்டும்.

அவளுடைய பெயர் என்ன? அவளுடைய பெயர் என்ன? நான்சி? எப்படி இருக்கிறாய், நான்சி? அந்த சிறுமி குணமடைந்து விட்டாள். அவள் சிரித்துக் கொண்டு இருக்கிறாள். அவளுக்கு தெரியும் அவள் குணமடைந்து விட்டாள் என்று....?... நீ இயேசுவை நேசிக்கிறாயா? நான்சி, நீ இயேசுவை நேசி, அவளை எல்லாரும் பார்ப்பதற்கு தலைகளை உயர்த்தவும்.

இந்த சிறு........?...... கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று நாம் சொல்லலாம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக....?..... நாங்கள் நன்றி உள்ளார்களாக இருக்கிறோம். அவள் இப்போ குணமடைய போகிறாள். புத்தி சார்ந்த குறைபாடு (மனநோயாளி).... மற்றவைகள் குணமானது போலவே இந்த குழந்தை குணமாகிவிட்டது. அந்த குழந்தையின் மனம் சரியாகிவிடும். அவள் எல்லாவற்றையும் கூர்ந்து கவனிப்பதை பாருங்கள்.

நான்சி? நான்சி? நான் கூப்பிடுறது உனக்கு கேட்கிறதா?. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அம்மா உங்களுக்கு விருப்பம் இருந்தால் ஒரு சிறு சாட்சி எழுதவும். சகோதரியே, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. மிகப் பெரிய விசுவாசம்.

32 அடுத்த வியாதியஸ்தரை கொண்டு வரவும். எல்லாம் சரி. அந்த சிறுமியை கொண்டு வரவும். நீ எப்படி இருக்கின்றாய்.

இப்போது எல்லாரும் உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும். அந்த சிறு பெண்ணுக்கு பாதங்களில் கட்டியும், கண்கள் மாறு கண்களாய் இருக்கின்றன.



ஆனால் இப்போது பல விஷயங்கள் தோன்றும் நேரம் வந்துவிட்டது, நோய் ஒவ்வொரு பக்கத்திலும் குவிந்து கொண்டிருக்கிறது. மேலும் நான் இந்த அறிக்கையை வெளியிட விரும்புகிறேன். நோயுற்றவர்களுக்காக நான் பிரார்த்தனை செய்வதாகக் கூறும் இந்த விஷயங்கள், நானே ஒரு காரியத்தைச் செய்வதாகக் கூறவில்லை. எதையும் செய்ய எனக்குள் எந்த சக்தியும் இல்லை; நான் ஒரு மனிதன், படிக்காதவன், படிக்காதவன், ஆனால் என் சாட்சியம் சரியானது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். உண்மையிலேயே ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட உயிரினம் என்னிடம் வந்து இந்த அறிக்கைகளை வெளியிட்டது, மேலும் நான் பரலோக தரிசனத்திற்கு கீழ்ப்படியாமல் இல்லை.

9 அதை என்னுடைய ஞானத்திற்கு இயன்ற மட்டும் தூக்கி செல்கிறேன். மேலும் யாரானாலும் சரி அதை அறிந்திருக்க வேண்டியதாக உள்ளது .அதாவது நான் படிப்பறிவு இல்லாமல் பொருத்தமற்ற திறன்களையும் கொண்டிராமல், எதையும் மக்களுக்கு கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லை. எனக்கு ஒரு நல்ல தோற்றம் கூட மக்களுக்கு கொடுக்க முடியவில்லை. அந்த வார்த்தை உரைக்கப்பட்டதின் நிமித்தம், பரத்தின் கீழ் உள்ள எல்லா தேசங்களுக்கும் அசைவாடியது. மே மாதம் ஏழாம் தேதியில் இருந்து மூன்று வருடங்களாக அது இயற்கைக்கு மேம்பட்ட ஒரு அசைவாக வேலை செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இரவும், மனுஷன் குற்றம் கண்டுபிடிக்காமல் இருந்தால், மனிதனின் முயற்சிக்கு அப்பால் ஏதோ ஒன்று இந்த மேடையில் நடக்கிறது என்றே நம்புகிறேன்.

இப்போது உங்களுக்கு அந்த காரியங்கள் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால், நான் அதை விமர்சிக்க போவதில்லை. நீங்கள் ஒரு வேளை அதை விமர்சித்தால் நான் அமைதியாக இருப்பேன். நான் ஒருவேளை நிஜமாக............ நம்பவில்லை என்பேனாகில், அந்த இயற்கைக்கு மேம்பட்ட அசைவு பார்க்கும் போது, நான் அமைதியாக இருந்து, சர்வவல்லவருடன் உள்ள எனது ஆவணங்களை சரியாக வைத்துக் கொள்வேன். நீங்களும் அப்படித்தானே செய்வீர்கள்? மேலும்..........

10 ஏனென்றால், ஞாபகம் கொள்ளுங்கள், ஒருவேளை நீங்கள் வித்தியாசமான சபைகளில் இருந்து வந்திருப்பீர்கள் என்றால், ....அதற்கு சந்தேகமே இல்லை, நீங்க அவ்வாறுதான் வந்திருக்கிறீர்கள். உங்களில் சிலர் தெய்வீக பிரசன்னத்தையே நம்புவதில்லை. உங்களுக்கு மன்னிப்பே இல்லை. மேலும் கிறிஸ்தவ நண்பர்களே, பாவியான நண்பர்களே, மருத்துவர்களே, வக்கீல்களே, தெய்வீக சுகம் அளிப்பதின் பேரில் நிறைய கேலி பரியாசங்கள் நடந்து கொண்டிருக்கின்றன, என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். கேலி பரியாசம் ஒவ்வொரு மார்க்கத்திலும், ஒவ்வொரு கட்டத்திலும் இருக்கும், ஆனால் நிஜமான.... நிஜமான பரிசுத்த ஆவியின் வல்லமை மனிதனை அவனுடைய பாவக் கட்டுக்களிலிருந்து விடுதலையாக்குகிறது. உண்மையான பரிசுத்த ஆவியின் வல்லமை வேதனைப்படுபவர்களை, அவர்கள் வேதனையில்

இருந்து விடுவிக்கிறது. சுவிசேஷத்தை பிரசங்கிக்க பிராயச்சித்தம் செய்கையில் தெய்வீக சுகமாக்குதலை சேர்த்துக் கொள்ளாமல் எப்படி அந்த குருமார்கள் சுவிசேஷத்தை பேசவும், பிரசங்கிக்கவும் முடியும். ஏனென்றால் "அவர்தான் நம்முடைய மீறுதலுக்காக காயப்பட்டார், அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்று கூறினாரே.

11 நீங்க ஒருமுறை எடுத்தாலும், அது அதே மனிதனிடத்தில் இருந்து, அதே நாளில் எடுக்கப்பட்ட அதே இரத்தம் தான். அது சரிதானே?. உங்கள் விசுவாசம் தான் உங்களை குணப்படுத்தும். அதைத்தான் இயேசு கிறிஸ்துவாகிய உங்கள் எஜமானர் சொன்னார். எல்லா முழங்காலும் ஒரு நாள் அவருக்கும் முன்பாக முடங்கி, ஒவ்வொரு வார்த்தைக்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று. அது சரிதானே. உங்களால் அதை நம்ப முடியும் என்றால், அது விசுவாசத்தை நடைமுறைப்படுத்துவதாகும். இரட்சிப்பின் மேல் விசுவாசம் வைத்தால் ஒரு வேசியையும், குடிகாரர்களையும் ஒரு நல்ல மனுஷனாகவும், மனுஷியாகவும் மாற்றும். அது சரிதானே? அதற்கு........? அது அருமையான மருத்துவர்கள் தங்களால் இயன்ற மட்டும் ஒரு ரேடியம், எக்ஸ்ரே (radium, X-ray) போன்ற கதிர்வீச்சுகளால், எரிக்கப்பட்ட புற்றுநோயை உடைய மனிதனை, சாதாரண மனிதனாக மாற்ற முடியும்.

அருமையான நண்பர்களே, நியாயாதிபதியாயிருக்கும் எனது ஆண்டவர் முன்னால் நிற்கும் போது, அது உண்மையான வாக்கு என்று அறிவார். மேலும் நூற்றுக்கணக்கானோர் அது உண்மை என்று அறிவர். ஆதலால் உங்களால் அதை நம்ப முடியாமல் போனால், மனித சமுதாயத்திற்கு உதவும் எதையும் நான் கடிந்து கொள்ள மாட்டேன். நீங்கள் செய்வீர்களா? இப்போது இல்லை, அது பொருளாதார(financial) சம்பந்தப்பட்டது இல்லை, உங்கள் எல்லாருக்கும் அது தெரியும். உங்களுக்கு எனது வீடு பற்றி தெரியும், அல்லது நீங்கள் எங்கள் பின்னாலே, எங்கேயானாலும் சரி, பரிசோதித்து பார்க்கலாம். அது, அதுவல்ல..........

12 ஒரு ஊழியக்காரனாகவும், பாப்டிஸ்ட் பிரசங்கியாக 12 வருடங்கள் எனது ஆலயத்தில் இருக்கும் போது, ஒரு பைசா கூட சம்பளமாக வாங்கினது கிடையாது. ஒரே ஒரு காணிக்கையைத் தவிர என் முழு வாழ்கையில், வேறு காணிக்கை எடுத்ததே கிடையாது. அது எப்போது என்றால், எனக்கு வீட்டு காரியங்கள் நடத்த முடியாமல் இருக்கும் போது, நான் என் மனைவியிடம் எனது தொப்பியை ஆலயத்தில் காணிக்கைக்காக அனுப்ப போகிறேன் என்று சொன்னேன். நான்கு ஐந்து வரிசையில் உள்ள பெண்கள் ஒரு சிறு பர்ஸை வைத்துக் கொண்டு சில பெனிஸ், நிக்கல்ஸ் (pennies, nickels) செலுத்திக் கொண்டு வந்தனர். அவள் இருதயம் ஆசீர்வதிக்கப்படுவதாக, அவள் தன்னிடம் உள்ள எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாள். சபையாரிடம் நான் விளையாட்டுக்கு தான் அதை செய்தேன், என்று சொன்னேன். நான் அதைப் பொருட்படுத்தவில்லை. பாருங்கள், காரணம் என்னால் முடியாது. அந்த ஏழை வயது சென்ற தாயாரிடமிருந்து பணத்தை எடுக்க



கரங்களை நன்றாகப் பிடித்து கொள்ளவும்.. நடந்து கொண்டே இரு.

இப்போது உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும். நிச்சயமாக அந்த சிறுவனை பார்ப்பதற்கு உங்கள் தலைகளை உயர்த்துவீர்கள். உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும்..........?........இப்போது.......?......இந்த பக்கமாக மேலே பார்க்கவும்...,....?.........

ஆமென். ("ஆமென்"......)

"அம்மா" ("அம்மா")

"கேட்கிறதா" ("உனக்கு கேட்கிறதா?")

இப்போது இயேசு கிறிஸ்துவின் நாமத்தால் மீண்டும் நடக்கவும். ஒரு வாலிபன் நிமிர்ந்து இருப்பது போல உன்னுடைய தோல்களை நிமிர்த்தி வைக்கவும். அது சரி இப்போது கர்த்தரை துதிக்கவும். உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு எல்லா இடத்திலும்........எல்லா இடத்திலும் இருக்கவும்.

அதோ அங்கு அவன் நிமிர்ந்து வருகிறான். உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும்.........?............ இப்போது நீங்கள் மேலே பார்க்கலாம்...... ஆமென். அவனுடைய சிறு தோல்களை நிமிர்த்தி வைக்கவும், நேராக, ஒரு சிறு மனிதனைப் போல.

(ஒலி நாடாவில் காலி இடம்)

31 கர்த்தர் தான் சுகம் அளிப்பவர்? நீங்கள் எவ்வளவு முடவனாக இருந்தாலும் அல்லது......?..... கர்த்தர் உங்களை குணமாக்க முடியும். உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும்.....?.

இது புத்தி குறைபாடு உள்ள ஒன்றாகும். எல்லாம் சரி, எல்லாரும் உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும்

அம்மா, இயேசு கிறிஸ்து உங்களுடைய சிறு பெண்ணை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வர முடியும் என்பதை நம்புகிறீர்களா? திரும்பவும் இயல்பான நிலமையுடைய குழந்தையாய் நம்புகிறீர்களா?

இப்போது, இது எப்போ......... எல்லோரும் உங்களுடைய தலைகளை தாழ்த்தினவாறு இருக்க வேண்டும். இது சாத்தானின் வல்லமையால் திடீரென்று தாக்கப்பட்ட குழந்தை. ஆறு வருடங்களுக்கு முன்பு இந்த சிறு குழந்தையின் மீது இது திடீரென்று வந்தது. இது அவளை துன்பத்துக்குள்ளாக்கியது. அவள் தன்னை நடுநிலையாக வைத்துக் கொள்ள முடியாவில்லை. .....?.......அழகான சிறுமி அவள். அவளுக்கு என்ன வயது அம்மா? இரண்டு வயது இருக்கும்.........?.,. இப்போது அவளுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள்தான் அவளை கையில் எடுத்து அவளுக்கு நடக்க கற்றுதர வேண்டும் .....?....... சில கணங்களுக்கு பிற்பாடு அது அவளை விட்டு வெளியேறும், அது நடக்கும் என்ற

கட்டி போட்டிருக்கிற சாத்தானே, தேவ குமாரன் நாமத்திலே இந்த குழந்தையை விட்டு வெளியே வா என்று கட்டளை இடுகிறேன் சாத்தானே.

நண்பர்களே, உங்கள் தலைகளை கண்டிப்பாக தாழ்த்தினவாறு இருக்கவும். நான் என் தலையை உயர்த்தியபோது, குறைந்தபட்சம் இரண்டு டஜன் குளிர் அலைகள் என்னைத் தாக்கின...?

(ஒலி நாடாவில் காலியிடம்) .....?..... உம்மை மட்டும் விசுவாசத்தில் வைத்து, உமக்கு கீழ்ப்படிந்தால், உம்முடைய மகிமையான கரங்களை ஜனங்கள் முன்பாக வைப்பீர். நான் உம்மிடத்தில் ஜெபிக்கிறேன். இந்த சிறுவனுக்கு சுகத்தை தாரும். இந்த சிறு சரீரத்தை முடமாகவும், ஊமையாகவும், செவிடாகும், கட்டி வைத்திருக்கும் இந்த அசுத்த ஆவியை..........?........உம்முடைய ஊழியக்காரனுக்கு விசுவாசத்தின் வல்லமையை தாரும்.

சாத்தானே, நீ இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே, இந்த சிறுவனை விட்டு வெளியே வா.

(சகோதரன் பிரான்ஹாம் கரங்களை தட்டி, விரல்களால் சொடுக்கு விடுகிறார்.)

கேளுங்கள்? உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு எல்லா இடங்களிலும் இருக்கவும். அந்த சிறுவன் மேல் ஆவியின் அழுத்தம்................

“அம்மா” ன்னு சொல்லு. “அம்மா” ன்னு சொல்லு.

பயபக்தியுடன் இருங்கள்...?...“அப்பா.” [அவர் கூறுகிறார், “அப்பா.”-எட்.]

நான் அவருக்குப் பின்னால் பேசுவதை அவன் சரியாகக் கேட்கிறான்.

அவன் பின்னாக நான் பேசிக் கொண்டிருப்பதை முழு நிறைவுடன் அவன் கேட்கிறான்.

இயேசு, இயேசு (அவன் “இயேசு” என்று சொல்கிறான் )

“ஆமென் ” (அவன் “ஆமென் ” என்று சொல்கிறான் )

உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருக்கவும். அவன் கேட்டுக் கொண்டும், என்னோடு பேசிக் கொண்டும் இருக்கிறான். இப்போது, சற்று ஒருகணம் மற்ற காரியங்களுக்கு போவதற்கு முன்பாக.......?.........

சிறுவனே தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து உன்னை சுகமாக்கினார். இப்போது நீ என்னிடம் நடந்து கொண்டு வா. சற்று, உன்னுடைய சிறு கரங்களை கீழே போட்டு, என்னிடம் நடந்து கொண்டே வா. நீ இப்படி நன்றாக கீழே குனிந்து, இப்போது மேலே எழும்பு.



என் மனது குற்ற உணர்வு கொண்டது.

சமீபமாக கலிபோர்னியாவில், ஆர்மீனிய மக்கள் அவர்களது திராட்சை ஆலையை விற்ற போது, எனக்கு ஒரு மில்லியன் டாலருக்கு மேல் கொண்ட ஒரு காசோலையை அனுப்பினர். நான் என் கரங்களை அதன் மீது வைக்க கூட இல்லை. நான் அதை திருப்பி அனுப்பி விட்டேன். இந்த உலகத்தில் உள்ள எல்லா சொத்துக்களை காட்டிலும், நான் ஏழையாக இருந்து, ஒரு குடிசையில் வாழ்ந்து, தேவனுடைய தயவை பெற்று அவரை நேசிக்கிறேன் என்ற திருப்தி அளிக்கக்கூடிய உணர்வு இருந்தால் போதும். அந்த மாறு கண்களுடைய குழந்தைகளில் ஒருவருக்கு கண்கள் சரியானால்......அந்த ஏழை வயதான தாய் முடக்கு வாதத்திலிருந்து குணமானால், அதுவே இவ்வுலகத்தில் உள்ள அனைத்து பணத்திற்கும் மேலே போதுமானதாய் இருக்கும். அதற்கு எந்த கட்டணமும் இல்லை, அதற்கும் எனக்கும் ஒரு சம்மந்தமும் இல்லை. எனது சரீரத்தை மற்றவர்களுக்கு உதவ ஒரு கருவியாக உபயோகிக்கிறேன்.

13 நான் எனக்கு அது தேவை........அது என்னுடைய......என் கூடவே இருந்த மனப்பான்மை, மேலும் நான் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும் மட்டும், இந்த மனப்பான்மையோடு செல்ல விரும்புகிறேன். எனக்கு அதற்குரிய வெகுமதி கிடைக்கும் என்று நம்புகிறேன். அந்த வெகுமதி கிடைக்கும் நேரம் வரைக்கும் விசுவாசமுள்ளவனாய் இருந்தால் அது கிடைக்கும். இங்குள்ள ஒவ்வொருவரும், என்றோ ஒரு நாள் வியாதியோ, துக்கமோ, தலைவலியோ அல்லது ஏமாற்றமோ இல்லாத ஒரு மேலான உலகத்தில் சந்திப்பேன் என்று நம்புகிறேன். அந்த பெரிய கல்யாண விருந்து பரத்தில் ஆயத்தப்பட்ட பிறகு இன்றிரவு இங்குள்ள அனைவரும் உங்களுடைய பிள்ளைகளோடு அங்கு இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நானும் அங்கிருக்க விரும்புகிறேன். நான் விரும்புகிறேன்.........எனக்கு ஒரு சிறு பெண்ணும், அந்த திரைக்கு பின்னால் மறைந்த எனது அருமையான மனைவியும் அங்கிருக்கிறார்கள் என்று அறிவேன். மேலும் எனக்கு இரண்டு பிள்ளைகள் வீட்டில் இருக்கிறார்கள், அவர்களும் அங்கிருக்க வாஞ்சிக்கிறேன் .

நேற்று மாலையில்....... இங்கு ஒரு பெண்மணி உட்கார்ந்து கொண்டு.........மேலே, இந்த நடை மேடைக்கு, மாறு கண்கள் உடைய ஒரு சிறிய குழந்தையுடன் வந்ததை எத்தனை பேர் கண்டீர்கள். சில வேளைகளில் அங்கு ஒரு வரிசை இருப்பதை குறித்து ஆச்சரியப்படுவது உண்டு. உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? முதல் கூட்டங்களில் எந்த அற்புதங்களும் நிகழ்த்தப்படவில்லை என்பதை நீங்கள் அனைவரும் நினைவில் வைத்திருக்கிறீர்களா, அவற்றில் பெரும்பாலானவை...

14 இப்போது ஞாபகம் கொள்ளுங்கள், நான் ஒரு அற்புதத்தை செய்பவன் அல்ல. நான் அல்ல நண்பர்களே. வியாதிகளை பகுத்தறிய தேவன் எனக்கு கொடுத்த ஒரு பரிசு அவ்வளவுதான். உங்களுடைய விசுவாசம் மட்டும் தான் அதிசயங்களை செய்ய வைக்க முடியும். இல்லை.......... பாருங்கள், நான் சொன்னது போல் உள்ள உங்கள்

விசுவாசம் தான், அதிசயங்களை கொண்டு வருகிறது.

இந்த பெண்மணி அந்த சிறு குழந்தையை கொண்டு வந்து சொன்னாள்..........அந்த குழந்தைக்கு மாறு கண் இருந்தது. நான் என் கரங்களை அதின் மேல் வைத்து தேவனிடம் அதை ஆசிர்வதிக்குமாறு கேட்டேன். அவள் சொன்னாள். மேலும் அவள், "சகோதரர் பிரான்ஹாம் குழந்தையை சிறிது நேரம் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினாள். அது என்ன என்பது இதோ நண்பர்களே.

15 இப்படியாக நான் கூறுவதை எத்தனை பேர் கேட்டிருக்கிறீர்கள். நியாபகம் இருக்கிறதா? என்னுடைய உணவு விடுதியில், ஜெபத்தில் இருக்கும் போது, ஒருவரையும் தெரியாத பட்சத்தில் மேனஜரை அங்கு அனுப்பி அங்கு சென்று ஒரு பெண்மணி இந்த விதமாக இருப்பாள் என்பதை காண்பாய், ஒரு மனிதன் இந்த விதமாய் இருப்பதை காண்பாய், மேலும் இந்த குழந்தை இந்த விதமாய்......... அது போல ஒரு டஜன் குழ்ந்தைகள் இருக்கலாம், ஆனால் அது இந்த உடையை உடுத்தி இருக்கும்....... நான் அதை முதலில் பார்ப்பேன். அது முதலாவது எனக்கு காட்டப்படும்.

பின்பு அவர்கள் அந்த ஜனங்களை வரிசையில் அந்த மேடையில் நிற்க வைப்பர், என் வாழ்கையில் அது தவறாக போனதே கிடையாது. அது சரியா? அதற்காகத் தான் அந்த A அட்டை மற்றும் C அட்டை கொடுக்கப்படுகிறது.

16 இப்போது, நான் அப்படி இல்லை..........இப்போது, இப்படி கூறும் உங்களிடம் அது வேத பூர்வமாய் இருக்கிறதா?. எல்லாம் சரி! பரிசுத்த யோவான் 5 ஆம் அதிகாரத்தில் தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து பெதஸ்தா குளமருகே கடந்து சென்றார், அங்கே மிகுந்த ஜனகூட்டமாகிய சப்பானியர், குருடர், வியாதியால் அவதியுற்றோர், படுத்துக் கிடந்தனர். உங்களுக்கு அந்த கதை தெரியும் அல்லவா? அங்கு குருடனாகவோ ,அல்லது சப்பானியாகவோ அல்லாத ஒரு வியாதியஸ்தன் இருந்தான். அவன் 38 வருடங்களாக வியாதி பட்டிருந்தான். இயேசு அவன் அருகே சென்று, அவனை குணமாக்கினார். பரி. யோவான் 5 அதிகாரம்

அதே அதிகாரத்தில், 19 ஆம் வசனத்தில் அவரைப் பார்த்து, யூதர்கள் கேள்விகளை எழுப்பினர். அவர் சொன்னார் "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்கிறேன் பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறது எதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் தாமாய் செய்ய மாட்டார் அவர் எவைகளை செய்கிறாரோ அவைகளை குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" அது சரி அல்லவா? அது எப்பொழுதுமே முன் காண்பிக்கபட்ட தொன்றாகும். எப்போது ஒன்று முன் காண்பிக்கபட்டதோ, அது தெய்வீக பரிசாகும் நண்பர்களே! ஜனங்களே, ஜெபத்தில் இருங்கள்.

17 நான் நடத்தின முழு கூட்டங்களில் ஒரே ஒரு தவறு மட்டும் நான் செய்தேன். அதற்கு நான் வருந்துகிறேன். அன்றிரவு அந்த சக்கர



ஜெபத்தில் தரித்திருங்கள். எல்லாரும் உங்களுடைய வியாதியஸ்தர்களை கொண்டு வாருங்கள். நண்பர்களே! இங்கே பாருங்கள். சற்று ஒரு நிமிடம் ஓ, இந்த சிறுவன் பாதிக்கப்பட்டிருக்கிறான். அவருக்கு இளம் பிள்ளை வாதம் இருந்ததாலா...? அதுதானே அவனை அப்படி நடக்க வைக்கிறது?...?... வலிப்பு நோய். ஆம் சரி . இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நீங்கள் இந்த சிறு பையன் இயல்பாக நடக்க முடியும் என்று நம்புகிறீர்களா? நீங்கள் அதை செய்யுங்கள். எல்லாம் சரி உங்கள் முழு மனதோடு அதை நம்பும் படியாய் உங்களை கேட்டுக்கொள்கிறேன். இப்போது அந்த சிறு பையன் பேசவோ, அல்லது கேட்கவோ, அல்லது நடக்கவோ முடியவில்லை. சரியா, அவன் நடக்கவில்லை. சரியா. அவன் தன்னுடைய உடம்பை ஊஞ்சல் ஆடுவது போல தரியில் நூல் செல்வது போல அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருக்கிறான்.

இப்போது இந்த சிறு பையனுக்காக ஜெபிப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்குமோ நான் அறியேன். ஆனால் எல்லோரும் உங்களால் இயன்ற வரைக்கும் பயபக்தியுடன் இருக்க கேட்டுக் கொள்கிறேன். மேலும் யாராவது உங்கள் தலைகளை உயர்த்தினால்....... இது இப்போது மனோ தத்துவம் கிடையாது. அதை பெறாதீர்கள். அது அப்படி என்றால் இயேசு கிறிஸ்துவும் கூட உபயோகித்தார். அவர் ஜனங்களை அந்த இடத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார், அந்த வீட்டிலிருந்து வெளியே அனுப்பிவிட்டார். அது வேதாகமத்தின் உண்மை என்றால் "ஆமென்" சொல்லுங்கள்.

(சபையார் ஆமென் என்று சொல்கிரார்கள்). ஆமாம், அவர் அப்படி செய்தார். அதே போல தான் அப்போஸ்தலர் பேதுருவும் செய்தார். இப்போது நான், "தலைகளை உயர்த்துங்கள்" என்னும் என்னுடைய சத்தம் வரும் வரைக்கும் உங்களுடைய தலைகளை தாழ்த்தினவாறு இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

பரலோகத்தின் பிதாவே காது கேளாமலும், ஊமையனாகவும், முடவனாகவும் இருக்கும் ஒரு சிறு பையனுக்காக உம்மிடத்தில், அன்பும் இரக்கத்திற்காகவும் வருகிறேன். என்ன பரிதாபம், மருத்துவர்கள் "கடினமாக முயற்சித்தார்கள்" என்று இந்த தாய் அவர்களுடைய அருமையான செல்ல குழந்தையை பற்றி சொன்னார்கள்.

இந்த சிறுவனின் வியாதிக்கு காரணமாய் இருக்கக்கூடியவைகளிலிருந்து விடுதலை பெற, மனிதனின் முயற்சி தோல்வியுற்றது. இந்த இரவு, இங்கு கொண்டு வருபவருக்கு இடையில் தள்ளாடிக் கொண்டு வருகிற அந்த சிறுவனுக்குக்கு கேட்கும், பேசவும், சரீரத்தை சரியாக இயங்க வைக்கவும் உதவி செய்யும். ஆனால் தகப்பனே நீர் அவனுக்கு சுகம் கொடுக்க இங்கே இருக்கிறீர். மேலும், இந்த இரவு இந்த சிறு பையனுக்கு இந்த ஆசீர்வாதத்தை அருளுமாறு ஜெபிக்கிறேன். உம்முடைய ஊழியக்காரனின் ஜெபத்தை கேளும் கர்த்தாவே.

இந்த சிறுவனை செவிடனாகவும், ஊமையானாகவும், முடவனாகவும்,

புசிக்கும் போது வெடி மருந்து பொடி, வாகனங்கள், மேலும் இப்போது அணுகுண்டு, இவைகளால் தன்னை தான் கெடுத்துக் கொண்டிருக்கின்றான். ஞானம், ஞானம்............. உண்மையாகவே தானியேல் தீர்க்கதரிசி சொல்வது போல் "அவர்கள் அங்கும் இங்கும் ஓடி, மேலும் அறிவு பெருத்து போகும்." ஆனால் இருள் அடைந்த இரண்டு ஆயிரம் வருடங்களுக்கு பிறகு, இன்று இரவு அந்த குணமாகும் வல்லமையை பெற்ற துதனின் சுவிஷேசத்தின் மூலமாக இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்திருக்கிறோம்.

இந்தப் பெண்ணின் சரீரத்தை கட்டிப்போட்ட சாத்தானே, நீ பெண்ணை விட்டுவிடு என்று கடவுளின் மகதேவ குமாரனானால் ஆணையிடுகிறேன். அவளை விட்டு வெளியே வா.

29 நிச்சயமாக சகோதரியே நீங்கள் அதைப் பார்த்துக் கொண்டே தான் இருக்கிறீர்கள். ஆனால் அது சிறிதளவும் கூட மாறவில்லை. இப்போது நான் சுகம் அளிப்பவன் கிடையாது. தேவனே சுகம் அளிப்பவர். ஆனால் இது............?......... (ஒலி நாடாவில் காலி இடம்). வேதாகமம் மூன்று சாட்சிகள் கூறுகிறது. இந்த சகோதரிக்கு இரக்கம் காட்டும். அவள் வாழ்க்கையை கட்டிப் போட்ட சத்துருவின் வல்லமை அதை எடுக்க வந்திருக்கிறான்..... நீர் இங்கிருந்து அவளுக்கு உதவியருளும்.

சாத்தானே, பெண்ணை விட்டு விலகும்படி தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலம் ஆணையிடுகிறேன்.

இப்போது அங்கே....... இப்போது நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், மேலும் உங்களுக்காகவே நீங்கள் பாருங்கள். அந்த கரம் அதே நிலமையில் தான் உண்டா, ஆனால் அது மாறி கொண்டு வருகிறது. அந்த ஓடிக் கொண்டிருந்த சிறு வெள்ளை பொருட்கள் என் கரங்கள் மீது நின்றுவிட்டது. அது அப்படித்தானே? பேசுங்கள் சகோதரியே (அந்த சகோதரி ஆமாம், அவைகள் அப்படியே நடக்கிறது...........). என்னுடைய கரங்கள் எப்பொழுதும் இருப்பது போல மாறிவிட்டது, அது உண்மைதானே. அம்மையே ? (ஆமாம், அவைகள் சென்று விட்டன......) சரி ஏதோ ஒரு காரியம் நடந்திருக்கிறது அப்படித்தானே? இப்போது, சபையார் உங்கள் தலைகளை உயர்த்தவும்.

ஏதோ ஒரு காரியம் அந்தப் பெண்ணுக்கு நடந்திருக்கிறது. இப்பொழுது உங்களுக்கு மூன்று சாட்சிகள் உண்டு. என்ன நடக்க போகிறது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? நீங்கள் நினைக்கலாம்..... நீங்கள் குணமாகி விட்டீர்கள் என்று? அம்மையாரே (குணமான பெண்மணியாக திரும்ப போகப் போகிறீர்கள்). குணமான பெண்ணாக திரும்பி செல்லுங்கள். எங்கிருந்து வருகிறீர்கள்? டென்னிசி, கிளீவ்லன்ட், டென்னிசி? நன்று கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே, உங்கள் வழியாக, திரும்பி கெம்பீரித்து செல்லவும். எல்லாம் சரி.

30 இப்போது எல்லாரும் தலைகளை தாழ்த்துவோம். எல்லாரும்



நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்த பெண்மணியை பற்றியதாகும். நான் நிச்சயமாக சொல்ல முடியும். அன்றிலிருந்து அந்த பெண்மணியை திரும்பவும் காணவில்லை, மேலும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்றும் தெரியவில்லை. அவளோடு கூட இரண்டு பெண்களும் உட்கார்திருந்தனர். அந்த ஒரு பெண்மணியை மேடையில் உட்கார சொன்னால் மற்றவர்களுக்கு அது மரியாதைக்குரியதாய் இருக்காது. மேலும் நான் ஜனங்கள் பற்றி நினைத்தேன்........? அந்த பெண்மணியிடம் தான் கர்த்தர் பேசிக்கொண்டிருந்தார்........ நான் கர்த்தரிடம் மீண்டும் அதை செய்யவே மாட்டேன் என்று வாக்கு கொடுத்தேன்.

எப்படியாயினும், அந்த குழந்தையுடன் கடந்து சென்ற பெண்மணியை பற்றி தொடர்ந்து கூறுகிறேன். நான் சொன்னேன், "மேலே கடந்து உட்காரவும்". சகோதரியே, இது உண்மை என்று உங்கள் முழு மனதோடு விசுவாசிப்பீர்கள் என்றால், சந்தேகிக்காமல் கர்த்தருடைய ஆசீர்வாதம் குழந்தை மீது கூறப்பட்டுவிட்டது என்று நம்புங்கள். மேலும் குழந்தை குணமாகிவிடும். ஏனென்றால் உங்கள் குழந்தையின் கண்கள் மாறுப்பட்டுள்ளது. நான் அதை செய்ய போகிறேன். இந்த அவையில் உள்ள நீங்கள் இந்த வரிசையினுடாக கடந்து செல்லும் போது, எங்கும் நடப்பது போல் குணமாவீர்கள். அது உண்மை. உன்னுடைய விசுவாசம் அவ்வளவு பலமுள்ளதாய் அந்த வெளிப்பாட்டிற்குள் உன்னை தூக்கி வீசும் என்றால் அது உனக்காக நடக்கும். இல்லை என்றால் அது நடக்காது.

18 அந்த பெண்மணி அங்கே நடந்து சென்று உட்கார்ந்தாள். அதிக நேரம் உங்களோடிருந்ததின் நிமித்தம், அன்றிரவு நான் மிகவும் களைப்புற்றிருந்தேன். கடைசி இரவு ஆராதனை முடிந்தவுடன், அந்த பெண் மீண்டும் வந்து கட்டிடத்தின் பின்புறத்தில், இன்னும் அதே மாறுபட்ட கண்களுடன் உடைய குழந்தையுடன் இன்னும் விசுவாசத்துடன் உட்கார்திருந்தாள். நான் பலிபீடம் முன்னால் சுகவீனமுள்ளவருக்காக ஜெபித்து கொண்டிருக்கும் போது, அவள் அந்த முற்றிலும் சரியாக்கபட்ட கண்களுடைய குழந்தையுடன் விளையாடி கொண்டிருந்தாள். ஆமென். அந்த பெண் இந்த கட்டிடத்தில் குழந்தையுடன் இருக்கிறாளா என்று வியக்கின்றேன் (ஒலி நாடாவில் காலி இடம்).

நமது சகோதரிக்கு நன்றி, .........இப்போது உண்மை எது என்று சொன்னேனோ அதை அவள் சற்று தொட்டாள். இப்போது, உண்மை எது என்று நான் சொன்னதை, அவள் தொட்டாள். இந்த இரவு இந்த வரிசையினுடாக செல்வீர்கள் என்றால், விசுவாசிக்க மட்டும் செய்யுங்கள். நீங்கள் நம்புவீர்கள் என்றால் என்னிடம் ஒன்றே ஒன்று மாத்திரம் உண்டு, அது தேவனுடைய வார்த்தை. என்னோடு கூட பேசிக்கொண்டு இருந்த இவர் என்ன சொன்னார் என்றால், " நீ மாத்திரம் (அதாவது என்னை) உண்மையாக இருந்து, ஜனங்கள் உம்மை விசுவாசிக்க செய்து, ஜெபத்தில் நீ உண்மையாக இருந்தால், உமது ஜெபத்திற்கு எதிராய் ஒன்றுமே இருக்காது, புற்று நோய்க் கூட நிற்காது.

”இப்போது அது உண்மை நண்பர்களே!

மேலும் அது............அந்த வழியாக கடந்து செல்லும் போது, குழந்தை மீது கரங்களை வைத்ததின் நிமித்தம் அந்த சிறு குழந்தையின் கண்கள் நேராகுமென்றால்?.......... அந்த தாய் திடமாக இருக்கிறாள். உங்களுக்கு வேண்டும் என்றால் அவர்களிடம் பேசலாம். அவள் தன் முழு மனதுடன் நம்பினாள். அவள் அங்கு தான் காத்துகொண்டு உட்கார்திருக்கிறாள். அது இன்னும் ஆறு வாரங்கள் ஆனாலும் அவள் காத்துக் கொண்டு தான் இருந்திருப்பாள். மேலும் அந்த குழந்தையின் கண்கள் சரியாகி இருக்கும். நீங்கள் அதை நம்புகிறீர்களா?

19 சில வேளைகளில் கர்த்தர் எனக்கு ஏதாவது ஒன்றை காட்டி, அதை செய்ய சொன்னால், நான் அதை செய்வேன். அதற்கு பிறகு......... பரிசோதனையை பொறுத்த மட்டில், அதாவது அந்த கர்த்தருடைய தூதன் கிட்டே இருக்கும் போது, உறுதியாக தான் அல்லது தெளிவாகத் தான் இருக்கும். பாருங்கள் அது தான் புலன்களால் அறிய கூடிய அற்புதத்தின் சம்பவம். அது நடப்பதற்கு முன்பு, முதலில் நான் அதை பார்க்கவேண்டும்.

கர்த்தர் உங்களோடு கூட இருப்பாராக. என்றோ ஒரு நாள் நாம் மீண்டும் சந்திப்போம் என்று நம்புகிறேன். நான் மீண்டும் உங்கள் பட்டிணத்திற்கு வந்து ஒரு பெரிய எழுப்புதல் கூட்டத்தை நடத்துவேன் என்று வாஞ்சிக்கிறேன். மேலும் ஊழியர்களுக்கும், செய்திதாள்களுக்கும், இந்த பட்டணத்தின் நகர மேயருக்கும் அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

இந்த மேடைக்கு வந்து, எப்படி ஒருவருக்கு பரிசோதனை செய்யப்படுகிறது என்று பார்க்க இந்த நகராட்சி தலைவர் விரும்பினார் என்று நம்புகிறேன். நன்று அது நிச்சயமாக உங்களுடைய உரிமை. நான் அதை செய்ய மகிழ்ச்சி அடைகிறேன். [சகோதரர் பிரான்ஹாம் இருமுகிறார்] (என்னை மன்னியுங்கள்)

20 மேலும் இப்போது, எந்த நேரமானாலும், சரி உங்களுக்கு உதவ நான் இருக்கிறேன். அபிஷேகிக்கப்பட்ட கைகுட்டைகளை அனுப்புவதற்கு, உங்களிடம் என்னுடைய முகவரி இருக்கும் அல்லவா? உங்களிடம் இல்லை என்றால் சற்று எழுதுங்கள். வில்லியம் பிரன்ஹாம், ஜெபர்சன்வில், இந்தியானா, தபால் பெட்டி 325. அல்லது அதை நினைவில் வைக்க முடியவில்லை என்றால், சற்று வில்லியம் பிரன்ஹாம் என்று மட்டும் எழுதுங்கள். அது என்னிடம் வந்து சேரும். எந்த விதத்திலாகிலும் உங்களுக்கு உதவ நான் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக. இந்த வரிசையை தொடங்கும் முன் நமது தலைகளை தாழ்த்தினவாறு, ஜெபிப்போமாக.

கீழ்த்தளத்தில் உங்களுக்கு கேட்கிறதா? இந்த இரவு கீழே வந்து உங்களிடம் பேசுவதற்கு நான் மறந்து விட்டேன். இன்னும் சில கணப்பொழுதில், சில கணங்களுக்கு ஓய்வெடுத்து கொண்டு, கீழே



27 எல்லாம் சரி. இப்போ எல்லோரும் பயபக்தியாய் இருங்கள். முன்னே வாருங்கள். உங்களுக்காக ஜெபத்தை ஏறெடுப்பதற்கு, இரண்டு மூன்று நிமிடங்களுக்கு முன்பு நோயாளிகளின் வலது கைகளில் ஒன்றும் இருக்கக் கூடாது. இங்கே.....இல்லை, இங்கே இருந்தாலும் உங்கள் கைக்குட்டைகளை வெளியே எடுக்கவும். கரங்களை பிடிக்கவும். எல்லாரும் சற்று.......... சற்று பயபக்தியுடன் இப்பொழுது ஜெபத்தில் தரித்திருக்கவும். ஒரு நொடிக்கு உங்களுடைய கரங்களில் ஏதாவது இருக்கிறதா என்று நான் பார்க்கட்டும். ஆமாம் வயிற்று கோளாறு. அது சரியாக உள்ளது அல்லவா.? நின்று கொண்டிருக்கும் உனக்கு ஒரு பெண்மைக்குரிய பிரச்சனையும் உண்டு. உனக்கு ஒரு பித்தப் பை பிரச்சனையும் உண்டு. ஆமாம் அம்மையாரே நிச்சயமாக நீங்கள் இந்த கூட்டங்களில் இருந்து இங்குள்ள அதிர்வுகளையும் மற்றவைகளையும் பார்த்திருக்கிறீர்கள். நான் என்ன கூறிக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிவீர்களா? எல்லாம் சரி, உங்களுடைய முழு இருதயத்தோடும் அதை நம்புங்கள்? ஆனால் இப்பொழுது உங்களுக்கு அது தெரியும்...,,. பாருங்கள் நீங்கள் எனக்கு ஒரு முன் பின் அறியாதவர்............?....... மேலும் அதை அறிவதற்கு எனக்கு ஏதோ ஒரு வழி உண்டு. அதை நீங்கள் அறிக்கை யிட்டு நம்புவீர்களா, அது தான் இயேசு கிறிஸ்து, கஷ்டப்பட்டு கொண்டிருக்கும் ஏழை மனித இனத்திற்கு அனுப்பும் ஒரு பரிசு என்று? எல்லாம் சரி.

28 இப்போது அது........ என் கரங்களில் அந்த இடத்தை பார்க்க முடியுமா. அது தான் அதிர்வுகள் என்று நாம் சொல்லுகிறோம். இப்போது அந்தப் பெயரை தான் நான் அதற்கு கொடுக்கின்றேன். அது என்னுடைய கரங்கள் மறுத்து போவது போல ஒரு உணர்ச்சி. பாருங்கள் எப்படி அது இருக்கிறது என்று.? இப்போது, உங்களுடைய கரங்களுக்கு மேல் உள்ள எனது கரங்களை எடுத்து எனது சொந்த கரங்களை அதன் மீது வைக்கிறேன். இப்போது, அது அப்படி இருப்பது போல் இல்லை. நான் திரு. பாக்ஸ்டர் கரங்களை அதன் மீது வைக்கிறேன். இன்னும் அவ்விதமாக இல்லை. இப்போது மீண்டும் உங்களது கரங்களை இதன் மீது வையுங்கள். அங்கு தான் அவைகள். பாருங்கள் அந்த சிறிய வெள்ளை பொருட்கள் என் கரங்கள் மீது ஓடுவதை? அப்படி தான் உங்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது என்று அறிவேன். இப்போது உங்கள் முழு மனதோடு நம்புவீர்கள் என்றால், எல்லாம் சரி, உங்களுக்கு அது தெரியும். எல்லா இடங்களிலிருந்து உங்கள் தலைகளை சாய்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிதாவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மீண்டும உயிர்பித்தவரே. இந்த உலகம் முழுவதும் அது நவீனமாக இருந்தாலும், கர்த்தர் மேல் ஒரு எளிமையான விசுவாசத்தை வைப்பதற்கு பதிலாக அவர்கள் ஞானத்திற்கு பின்னாக சென்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏதேன் தோட்டத்தில் அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை புசிக்கும் போது ஜீவ விருச்சத்தின் மரத்தோடு உள்ள இணைப்பை துண்டித்துக் கொண்டனர் என்பதை அறிகிறோம். அதிலிருந்து மனிதன் ஞானத்தின் பின்னாக சென்று, ஒவ்வொரு முறையும் அந்த மரத்தை

பிரச்சனை என்பதை பார்க்க முடியுமா. அவர்களுக்கு முகத்தில் புற்றுநோய் உள்ளது. அது அவர்களை அறித்துக் கொண்டிருக்கிறது. உண்மை என்னவென்றால் முகத்தில் உள்ள அருமையான பகுதி ஏற்கனவே புற்றுநோயால் அறித்து விடப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அன்பான சகோதரியே, ஏதாகிலும் ஒன்று செய்யாவிடில் கர்த்தரால் காய்ந்து போக செய்யாவிடில் உங்களுக்கு வாழ்க்கை மிகவும் குறைவாக உள்ளது என்பதை அறிந்திருக்கிறீர்களா. நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் சியான்? இந்த பட்டணத்திலா வசிக்கிறீர்கள்? நான் இயேசுவிடம் கேட்டால், நீங்கள் குணமடைவீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா? உங்களுக்கு தெரியும் நீங்கள் குணமாவீர்கள் என்று. எல்லாம் சரி. அது ஒரு நல்ல விசுவாசம். இப்போது நாம் எல்லாரும் பயபக்தியோடு ஜெபத்தில் தரித்திருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் அன்புள்ள பிதாவே, உமக்கு அருமையான எங்கள் சகோதரி இங்கே மரித்துக்கொண்டிருப்பதை நான் அறிகிறேன். ஒரு மிகவும் அருவருக்கத்தக்க, பயங்கரமான புற்றுநோய் அவளின் முகத்தை அரித்துக் கொண்டிருப்பதை பார்க்கிறேன். அதை பார்க்கும்போது எதுவுமே அதை நிறுத்துவதாக தென்படவில்லை, நீர் மட்டுமே ஆண்டவரே, அதை செய்ய முடியும். தகப்பனே நீர் இந்த இரவு, இந்தப் பெண்ணுக்கு சுகம் கொடுப்பீர் என்றால் நாங்கள் எவ்வளவாய் உம்மை பாராட்டுவோம். அது ஒரு அற்புதமாக இருக்கும் அல்லவா. ஒருவேளை இதற்காக தான் நீர் என்னை திரும்பி வர செய்தீர் என்றும் அது சீயோனில் ஒரு சாட்சியாக அமைய என்னை திரும்பி வர செய்தீர் எனபதை நம்புகிறோம். இதே பட்டணத்தில் அநேக வருடங்களாய் குருடர்களாய் இருந்த அநேக குருடர்களை பார்க்க செய்த நீர், மாறு கண்களை உடைய குழந்தைகளை சரியான முறையில் பார்க்கும்படி செய்த நீர் இந்த இரவு இங்கு இருந்து இந்த சகோதரியை குணமாக்குவீர். (ஒலி நாடாவில் காலி இடம்) நீங்கள் அதை நம்புவீர்களா. நீங்கள் அதை நம்புவீர்களா? (ஒலி நாடாவில் காலி இடம்) உங்கள் முழு இதயத்தோடு இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்ற நம்புவீர்களா?

நண்பர்களே இதை நம்புவதற்கு சற்று கடினமாக தான் இருக்கும் ஆனால் ஜெபத்தின் காரணமாக அந்த பெண்மணியை அறிந்த உங்களுக்கு, அந்த புற்றுநோய் அந்த முகத்திலிருந்து காய்ந்து கொண்டு வருகிறது. அது ஏற்கனவே............?....... கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். உங்களிடம் இருந்து கேட்க விரும்புகிறேன். இப்போ உங்களுக்கு விருப்பம் இருந்தால் உங்கள் தலைகளை உயர்த்தவும். அவள் முகத்தை பாருங்கள். இந்தப் பக்கமாக பாருங்கள் சகோதரரியே. அந்த இருள்............இப்போது நாம் சொல்லுவோம். “அவளுக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம்.”

எத்தனை பேருக்கு அந்த பெண்மணியை தெரியும்...? எல்லாம் சரி. ஒரு சில நாட்களுக்கு அவளை கவனித்து பாருங்கள். சகோதரியே கர்த்தர் உங்களோடு இருப்பாராக..........?......... கர்த்தருடைய மகிமையை குறித்து சாட்சி பகர்கின்றாள்.



உங்களை வந்து பார்ப்பேன்.

21 எங்களுடைய பரலோகத்தின் பிதாவே, இந்த இரவு, இது ஒரு மகத்துவமான நேரம் ஆக இருக்க ஜெபிக்கிறேன். உம்முடைய சுகம் அளிக்கும் தூதனும், இரக்கத்தின் தூதனும், கர்த்தராகிய இயேசுவின் பிரசன்னமும் இந்த கட்டிடத்தில் மென்மையாக இருப்பதாக. இந்த சீயோனில், இந்த இரவு ஒரு மிக சிறந்த இரவாக இருக்கட்டும், கர்த்தாவே. இந்த பட்டிணத்தை தாங்கும் இந்த பூமியை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. இந்த அருமையான எல்லா ஜனங்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. இதைப் போல நான் எந்த பட்டணத்திலேயும் பார்த்ததில்லை. எப்படியாயினும் கர்த்தாவே 4 0 வருடங்களுக்கு முன்பாக, உம்முடைய ஊழியக்காரன் உரைத்த தீர்க்க தரிசனமானது நடைமுறைக்கு வரும் என நான் நம்புகிறேன். ஒரு எழுப்புதல் இந்த பட்டணம் முழுவதுமாக வந்து, இந்த தேசம் முழுவதையும், ஒரு முறை இந்த பட்டணம் முழுவதையும் துடைத்துக் கொண்டு போகட்டும். இந்த இரவு எங்களை ஆசீர்வதியும், உமது ஊழியக்காரனை உமது பிரசன்னத்தால் அபிஷேகித்து, அதின் நிமித்தம் இந்த வரிசையினுடாக கடந்து செல்பவர்கள் சுகமடையட்டும். இவை அனைத்தையும் உமது குமாரன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

22 (ஒலி நாடாவில் காலியிடம்) ஆசீர்வாதம்?... இந்த நேரத்தில் அவர்கள் எப்படியாயினும் என்னுடைய கனடா நாட்டின் மேலாளரை சந்திக்க விரும்புகின்றனர். இது பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள மதிப்பிற்குரிய எர்ன் பாக்ஸ்டர் அவர்கள். அவர் கனடா நாட்டின் கூட்டங்களில் இருந்து, கனடாவினுடாக கூட்டங்கள் நடத்தி, பின் கடல் கடந்து மற்ற தேசத்திலும் கூட்டங்களை அமைப்பதற்கு அவர் முற்படுவார். அது சரியா சகோதர பாக்ஸ்டர் அவர் களே. (சகோதரன் பாக்ஸ்டர் பேசுகிறார், மேலும்நம்பிடுவீர் என்ற பாடலை பாடி சபையை நடத்துகிறார்.)

நான் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தேன், அங்கே ஒரு மனிதர் என்னைச் சந்தித்தார். அவர் கூறினார், “சகோதரர் பிரான்ஹாம்,” நான் எப்போதும் உங்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். என்...“ என்றார், ”நான் எப்போதும் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்.“ நான் அதைப் பற்றி பேச விரும்பவில்லை. என், அது நல்ல நண்பர்களை விட்டுச் செல்ல கிட்டத்தட்ட என்னைக் கொன்றுவிடுகிறது. ”என் மகள் வலிப்பு நோயால் குணமாகிவிட்டாள்“ என்று கூறினார். அவரது மனைவி, ஓ, அவள் குணமடைந்ததை நான் மறந்துவிட்டேன். ஆனால் ஓ, இது மிகவும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஓ, நான்...?...அதுதான்-உலகில் இருக்கும் எல்லாப் பணத்தையும் விட அதுதான் எனக்கு மதிப்பு. வலிப்பு அவரது மகளுக்குப் போய்விட்டது....?... இப்போது வீடு வித்தியாசமாக இருக்கிறது, இல்லையா? இயேசு வரும்போது... தேவன் நம் சிறந்த குணமளிப்பவர்; அவர்தான் எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்கிறார்.

23 இப்போது, இங்கே யாராவது இருந்தால்..........ஒவ்வொரு இரவும் இந்த அறிக்கையை அறிவிக்க நான் கடமை பட்டுளேன். நீங்க யாராவது

இதை நம்பவில்லை என்றால், உண்மையை குறித்து அவநம்பிக்கைக் கொண்டிருப்பீர்கள் என்றால் சற்று ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கையில், அப்படிப்பட்டவருக்கு என்ன நேர்ந்தாலும், அதற்கு நான் பொறுப்பல்ல காரணம் இந்த காரியங்கள் ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு வரும்.

இங்குள்ள ஒவ்வொருவரும் எனக்கு சாட்சியாய் இருக்கிறீர்கள். நான் அந்த அறிக்கையைச் சொல்கிறேன்: நீங்கள் வெளியேறுங்கள், கட்டிடத்தில் தங்க வேண்டாம். உங்கள் தலைகளை தாழ்த்தினவாறு இருங்கள். நீங்கள் மட்டுமல்ல, அவையினர் அனைவரும் அப்படியே செய்யுங்கள். இப்போது, நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் ஒத்துழைப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இப்போது, நான் கீழ்தளத்திற்கு சென்ற போது அங்குள்ள மக்கள் இங்குள்ள அதே எண்ணிக்கையில் உள்ளனர். ஒரு அழகான அவையினர். மேலும் கீழ்தளத்தில், இந்த ஆராதனையில் கேட்டுக் கொண்டிருக்கிற அந்த மக்கள்......... தேவனுடைய அன்பு இந்த மக்களை கர்த்தரிடம் கொண்டு வரவில்லையா என்று, என்னிடம் சொல்லுங்கள். பாருங்கள் அவர்கள் அங்கு உட்காந்து கொண்டு இருக்கின்றனர். ஒரு காரியம் கூட நடப்பதை அவர்கள் கண்டதே இல்லை. எந்த கூட்டத்திலேயும் அவர்கள் இருந்தது கூட இல்லை. ஆனால் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். ஒரு மேடையும் ஒரு பலிபீடமும் இருந்தால் ஒரு ஜெப கூட்டம் வைக்க அது போதும். அந்த ஜனங்களுக்குள்ளே இவர்கள் ஒரு நல்ல கூட்டம். அவர்கள் அங்கே தங்களால் இயன்ற மட்டும் பயபக்தியோடு அழகாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். நாம் ஜெபிக்கும் போது அவர்களும் தலைகள் தாழ்த்தி இருப்பதை நான் கற்பனை பண்ணி பார்க்கிறேன். அவர்கள் அப்படிப்பட்ட ஜனங்கள் தான்.

கீழ்தளத்தில் உள்ள மக்கள் ஜெபத்திலே தரித்திருங்கள். நான் ஜெபிக்கும் போது உங்கள் முழு இருதயத்தோடு உங்கள் பெலத்தை எனக்கு கடன் கொடுப்பீர்களாக.

24 நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது அவர்களும் ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். இங்கே சகோதரி...............

உங்கள் பிரச்சனை உங்கள் முதுகில் உள்ளது. ஐயா, அது உண்மைதானா? உங்களுக்கு......... ஒரு கட்டி அங்கு உள்ளது. எவ்வளவு காலம் அந்த வழியாக அப்படி இருந்தீர்கள்?........,. விடுதலை.......?....... அதில் உள்ள குழப்பங்கள் உங்களை பயத்திற்குள்ளாக்கியது. அந்த காரியங்கள் உண்மைதானா? இப்போது நீங்கள் எனக்கு முன்பின் அறியாத ஒருவர்? ஆனால் இப்போது நம்புகிறீர்களா? ... காரணம் 30 வருடங்களாக நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். சந்தேகம் இன்றி அநேக சிறந்த மருத்துவர்களும், மேலும் அதைப் போன்ற பலர் உங்களுக்கு உதவி செய்ய முயன்றனர். தங்களால் இயன்ற மட்டும் என்னென்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்தனர். எல்லோரும் உங்கள் மீது விருப்பம் உள்ளவர்கள். தங்களால் என்ன செய்ய முடியுமோ அதை செய்ய விருப்பபடுகின்றனர். மேலும் உங்கள் கூடவே இருந்து செய்தனர்........?......ஆனால் அவர்களால் அது முடியாது, அது, அவர்களால் எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ, அவ்வளவு தூரம் அது இருக்கிறது. ஆனால் இப்போது, உனக்கு சுகம் கொடுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் வா. உன் விசுவாசத்தை அறிக்கை செய்து உன்னை குணப்படுத்துவார் என்பதை நம்பி அவரிடம் வா. (ஒலிநாடாவில் மறுபடியும் காலி இடம்).......?..... அவையில் உள்ள நீங்கள் ஒவ்வொருவரும் பயபக்தியோடு ஜெபத்தில் தரித்திருங்கள்.



25 எங்கள் பரலோகத்தின் பிதாவே, இந்த இரவு, உம்மை நாங்கள் மிகுதியாக நேசிக்கிறோம். நீர் எங்களோடு கூட, கி அருகில் இருந்து இந்த சகோதரனை முழுமையாக்குவீர் என்பதை நம்புகிறோம். எதிராளியின் வல்லமையினால் கட்டப்பட்டு இருக்கும் இந்த மகனின் கட்டுகளை உடைத்தெறியும். வாழ்நாள் முழுவதும் எதிரியின் கட்டுக்குள் இருக்கும் இந்த மகனை புதியவனாக்கும். மேலும் இது அநேக மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டு ஒரு உதவியும் இந்த மனிதனுக்கு செய்ய முடியாமல் இருக்கிறது. மேலும் இந்த இரவு, தகப்பனே உம்மீது உள்ள தன்னுடைய விசுவாசத்தை முயற்சி செய்ய அவர் வருகிறார்.

மேலும் நாங்க வேதாகமத்தில் என்ன கற்பிக்க படுகிறோம் என்றால், எலியாவை போன்று, நீதிமானின் ஊக்கமான ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். மேலும் நாங்கள் நீதிமான்கள் அல்ல என்பதை உணருகிறோம், ஆனால் நீங்களோ நீதிமான். என் முழு இருதயத்ததோடு இந்த மகனுக்காக இரக்கத்திற்கு கேட்கிறேன். இந்த மனிதனுக்காக எவ்வளவோ முயற்சிகள் போடப்பட்டிருப்பதற்காக நன்றி சொல்லுகிறோம். ஆனால் அவை எல்லாம் தோல்வியுற்றன. அதை முயற்சி செய்த மனிதர்களுக்காக உமக்கு நன்றி சொல்கிறேன். ஆனால் இப்போதோ தகப்பனே உம்முடைய குணமாக்கும் வல்லமை இந்த சகோதரனுக்கு தெரிந்திருப்பதாக.

காணக்கூடாத சாத்தானின் வல்லமை இந்த மருத்துவர்களின் கண்களுக்கு மறைக்கபட்டிருப்பதை நான் கடிந்து கொள்கிறேன். தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் கடிந்து கொள்கிறேன். இந்த மனிதனை விட்டு வெளிய வா.....?....இப்போதே, நீ...?....எல்லாம் சரி, சபையாரே உங்கள் தலைகளை உயர்த்தவும். அந்த மனிதன் குணமாக்கப்பட்டார். என்ன? அவர் அதை செய்ய..,..?........ நீராகவே சகோதரனே. இப்போது எல்லாம் சரியாக உணருகிறீர்களா, உங்கள் கரங்களை உயர்த்தவும்.......?.......எல்லாம் சரி........?.......

இப்போது, எல்லோரும் உங்கள் தலையை தாழ்த்துங்கள், பெண்ணே வாருங்கள், அவள் போக விரும்புகிறாள்....?... உங்கள் வியாதியஸ்தரை கொண்டு வாருங்கள்.

26 ஓ! நிச்சயமாக .........?........நிச்சயமாக இது அல்ல...... (ஒலி நாடாவில் காலி இடம்) யாருக்காவது இந்த பெண்மணிக்கு என்ன